801

ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD. No. M.-2913

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா ... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ... ரூ. 3
ஆறுமாத சந்தா ... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்
களுக்குத் தனி சார்ஜ்.

பு—25 | கும்பகோணம் பிரமாதி-ஸு மார்கழி-மீ 20உ 1940 ஸு ஜனவரி-மீ 4உ | ஸ—1

வாரக் குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ வே ஸோ சர்மா.

பூபாரமகலும் வழியோ? சண்டையில் இறந்தவர் கணக்கை வெளியிடுவது ராஜ தந்த்ரமல்ல. ஆதலினது வெளியாவதில்லை துருக்கியில் பூகம்பத்தில் ஸங்காதமரணம் 30 ஆயிரம் பேருக்குத் தோன்றிற்று! இவைகளை நோக்குமளவில் பூபாரமகற்ற இறைவன் திருவிளையாட்டோ இது என்று எண்ணமுண்டாகிறது!

ஸ்ரீ அழகப்பர் கிருப்பு சத்ரு! திருவண்ணாமலை அன்னசத்ரதர்மகர்த்தா, கிருப்புள்ளவனுக்கு அன்னமில்லை என்று கூறி க்ஷவரகனுக்குத்தான் கூலி கொடுத்து சுமார் 200 கிருப்புகளை அகற்றி குடுமிவைத்து அன்னமிட்டார் உள்ளத்திற்கிணங்க சிதம்பரம் சத்திரத்தில் அங்ஙனம் விளம்பரம் மாத்ரமிருக்கிறது.

டில்லியில் பிராமண சபை! சிலர் ஒன்று கூடி இப்பெயர் கொண்ட ஸபை ஆரம்பித்து ஆங்காங்கு கிளைதோற்றுவிக்க முயற்சிக்கிறார்கள். ஒருவகையில் அந்த ஸமூக ஸேவை செய்வதில் அது பயனுள்ளதாயினும் ஆஸ்திகரனைவரையும் ஒன்று சேர்த்து ராஜகீய விஷயத்திலீடுபட வர்ணாச்ரமஸ்வராஜ்ய ஸங்கத்தை பலப்படுத்துவதே உசிதமென்பாம்.

அரும்பெரும் உரை!! கல்கத்தா ஹிந்து மஹாஸபை தலைவர் கூறிய யுக்தியுக்தமான சொற்கள் எல்லோர் மனதையும் கவர்கிறது. ஒவ்வோர் ஹிந்துவும் அவச்யமதைப் படிக்கவேண்டும். உள்ளூர் சபைகள் அதை அச்சிட்டு பலர் படிக்கும்படி செய்தல் நலம்!

ஏமாறுவரோ? இந்திய தேசீய ஸபையுடன் ஓர் ஸமாதானம் செய்துகொள்ள வெள்ளையர் பல தந்த்ரம் செய்கின்றனர். இதனிடம் பயந்தல்ல!! ஹிட்லருக்கு ஸமாதானங் கூறவே இம்முயற்சி!! ஒரு பெண்ணுக்கு மத்ய அரசாங்கத்தில் நிர்வாஹபதவி அளிக்கப்போவதாக தெரிகிறது!!

நமது ப்ரார்த்தனை வீணில்லை!! டிஸம்பர் கடைசி வாரத்தில் விழுப்புரம் சிதம்பரம் ஆழ்வார் திருநகரி முதலியவிடங்களில் பல தர்ம ஸபைகள் நடந்தன. ஆனால் அவைகள் விரிவாக மற்ற பத்ரிகைகளில் வெளியாவதில்லை. நமக்கோ இடமில்லை! எப்படியோ நம் விருப்பம் கைகூடிற்று!

பஜனை ஸபை மூன்றுமாண்டுவிழா! மாம்பலத்தில் சென்ற வாரம் ஸ்ரீ ராமசந்த்ர ஹரிஹரியின் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது! ஸ்ரீ ஜகத்குருவின் ஸ்ரீமுகம் படிக்கப்பட்டு ப்ரஸாதமும் அளிக்கப்பட்டது. தலைவர் வெகு அழகாக உபன்யஸித்தார்.

ஸ்ரீ ராதாகல்யாணம்!! ஞாயரன்று காலை முறைப்படி மாம்பலம் மஹாலக்ஷ்மீ தெருவில் ஸ்ரீராமசந்த்ர ஹரிஹரியின் கோஷ்டியாரால் நடத்தப்பட்டது. ஸ்ரீபாதராஜரும் பண்டரீபுரத்திலிருந்து ஓர் துறவியும் விஜயம் செய்தார்கள். ஹ்ருஷீகேசம் ஸ்ரீ சிவாநந்த ஸரஸ்வதிகளின் ஆசீர்வாதம் துளஸீ மாலைரூபமாக ஹரிஹரிக்கு அடியேனாலளிக்கப்பட்டது. ஸ்ரீ அப்புசாஸ்திரிகள் உபன்யஸித்தார்.

சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்

விசேஷ குறிப்புகள்

ப்ரவர்த்தகர்கள்:— தர்சந காலத்தில் பல நன்மைகளை எதிர்பார்த்து ஸ்ரீமான் வெங்கிடசுப்ரமண்ய திக்ஷிதரும் பத்ரிகை ஏஜண்ட் நாராயணய்யரும் இச்சபையைக் கூட்டினர். இவர்களுக்கு மாகாண ஸபை அனுபவம் குறைவானதாலும் பிரதிநிதிகளுக்கு பூர்ணமான ஸஹாயம் செய்ய முடியவில்லை என்றாலும் இலவசமாக எல்லோருக்கும் அன்னமிட்டது மிக கொண்டாடத்தக்கதே!

கொடியேற்றிய வீரர்!:—ஸ்ரீமான் ஸோமதேவ சர்மா கூறியபடி சேஷசாயி கொடியைசேஷனே ஏற்றவல்லவர்! சேலத்திலிருந்து வக்கீலிடமிருந்தே தர்ம க்லாநி நேர்ந்ததால் சேலம் வக்கீலையே பகவானளித்தார் போலும்! ஸ்ரீ சேஷய்யர் மிககம்பீரமாக ப்ரஸங்கித்தார்.

திறப்பாளரும் தலைவரும்! சர்மா கூறியபடி வைதிக ரத்நமான ஸ்ரீ ரத்நம் பிள்ளையின் சொற்களும் ரத்நமாகவே இருந்தன. மாசில்லாத சொற்பொழிவு ஸ்ரீ மாசிலாமணி செய்தார். எதிர்பாராத ஸ்ரீ அநந்த கிருஷ்ண சாஸ்த்ரியெனும் காளமேகம் ஸ்ரீ சர்மா வேண்ட வடமொழியிலும் தென்மொழியிலும் தேன்மாரிப் பொழிந்தது. ராஜா ஸர் அண்ணாமலையின் செய்தி அருமையானது.

ஸ்ரீ நடேசய்யரின் ஆன்ம சக்தி! மிக முக்ய கார்யத்தை நாடி அவர் மதுரையில் தங்கினரெனினும் அங்கிருந்து பெண்களுள்பட பல ப்ரதிநிதிகளை அனுப்பினர். ப்ரதிக்ஷணம் தந்தி கடிதம் வந்தவண்ணமாயிருந்தது. அழுத்தம் திருத்தமாக மதுரை ஸம்ஸ்க்ருத வாத்யார் மனைவி செய்த ப்ரஸங்கம் மீனாக்ஷியின் ஆணையை நினைவூட்டியது.

தண்டலத்தாரின் ஒப்பற்ற செயல்! ஸ்ரீமான் ராமஸ்வாமி அய்யர் பாம்பே வல்லப மடாதிபதியையும் இச்சபை மேடை மீது அமர்ந்து ஆசீர்வதிக்கும்படி செய்தது. இதுவரை நேராத அத்புதம். (ந. கி. நி)

JINNAH'S ANGER.

"The policy of this Fascist Grand Council" declared Mr. Jinnah at the Bombay Deliverance Day' demonstration, "is based on falsehood and hypocraicy. We must expose them. The High Sole Commander of the Congress High Command is Gandhiji, who is the Highest Devotee of Truth and Non-Violence."

What an irony that such high quarters are charged with such high wickedness! The power and prestige of the Congress High Command mainly rest upon its practical monopoly of propaganda. Forgetting their limitations, they have insulted and provoked numerous sections of the people, probably more by their airs of arrogance and poses of omnipotence, than by their actions. 'State craft is not bania craft'. Eternally reiterating and sticking to your view, ignoring other views and interests is not the way to win in politics. Till the Congress High Command learns this, much more trouble is still in store for our country.

திறமைவாய்ந்த் எவ்வித நவீன பல் வயித்தியத்திற்கு, டாக்டர் கோஷியே.
பற்பொடிகளில் சிறந்தது, கிருஸ்லீட் பற்பொடி ஒன்றே.
கிருஸ்லீட் பல் ஆஸ்பத்ரி, ரெயில்வேஸ்டேஷன் எதிரில், கும்பகோணம்.

பக்தி.

முடிகொண்டானில் ஸ்ரீ ஜகத்குரு பிரஸங்கம்

பிரபல மிராசுதார் மாடி நாராயணஸாமிஅய்யரின்கிரஹத்தில், சென்ற 15-12-39 நடைபெற்ற பிக்ஷையில் இரவு 9-மணிக்கு மே[illegible] 'பக்தி' என்ற விஷயத்தைப்பற்றி, நமது ஸ்ரீ ஜகத்குரு சங்காரச்சார்ய ஸ்வாமிகள் அவர்கள், வெகு உருக்கமாகவும் நன்றாகப் பதியும்படியாகவும், உபன்யஸித்தார்கள். அதன் ஸாரம் பின்வருமாறு:—

'பக்தி பண்ணிக்கொண்டிருந்தால், முக்தி பெறலாம்' என்று தமிழில் ஓர் வாக்கியம் இருந்துவருகின்றது. இதே அபிப்பிராயத்தையொட்டி, ஸ்ரீ பகவத்கீதையிலும், நமது பகவத்பாதாளின் கிரந்தங்களிலும், ச்லோகங்கள் இருக்கின்றன. (ச்லோகங்களை எடுத்துக்கூறினார்கள்.)

மனிதப் பிறவியில் ஒவ்வொரு ஆன்மாவிற்கும் பக்தி முக்கியமானது. பகவானுடைய அருளைப்பெறுவதற்கு இதுவே லளிதமான மார்க்கம். பக்தியில்லாதவன் பதருக்கு ஒப்பாவான்.

உதாரணமாக ஓர் வீடு இருக்கின்றது. அதில் சகலசௌகர்யங்களும் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், தீபம் மட்டும் இல்லை. அந்த வீட்டிற்குச் சோபை ஏற்படுமா? ஏற்படாது. பதர் இருக்கின்றது. வெளிப்பார்வைக்கு அழகாக விருக்கின்றது. அதனுள் சத்து இல்லாததால், பிரயோஜனமற்றதாகின்றது. ஓர் மனிதன், எவ்வளவு ஸௌக்கியங்களையும் அனுபவித்தபோதிலும், பக்தியற்றவனாகவிருந்தால், தீபம் இல்லாத வீட்டிற்கும், பதருக்கும், சமானமாவான். தீபம் வீட்டை எவ்விதம் அலங்கரிக்கின்றதோ, நெல்லிற்குள் அரிசி இருந்தால் எவ்விதம் உபயோகப்படுகின்றதோ, அவைபோல, பக்தியுடன் கூடிய ஸகலஸம்பத்துக்களுடன் உள்ளவன் பிரகாசிக்கின்றான்.

பக்தி என்பதின் பொருள் பிரேமை, அதாவது அன்பு, பணம், ஸம்ஸாரம், குழந்தைகள், முதலானவைகளில் நாம் மிகுதியான ஆசை வைக்கின்றோம். அதாவது அதுகளிடத்தில் பிரேமை அதாவது பக்தி. ஓர்பன்றி இருக்கின்றது. அதன் குட்டிகள் இருக்கின்றன. நம்முடைய குழந்தைகளை நாம் சிங்காரித்து, ஆனந்திக்க வேண்டுமென்று நாம் விரும்புவதுபோல், அந்தப் பன்றிக் குட்டிகளையும்சமமாகப் பாவித்து, அதுகளுக்கு அலங்கரித்து, ஆனந்திக்க நாம் விரும்புகிறோமா? இல்லை. ஏன்? நம் குழந்தைகளிடத்தில் நமக்குப் பக்தி ஜாஸ்தி. பன்றிக்குட்டிகளிடம்பிரேமையில்லை பிரேமையிருந்தால், நம் குழந்தைகளைப் போல், அதுகளையும் நினைப்போம். உலக நடவடிக்கையில், நமக்கு எதனிடத்தில் பிரேமை அதிகமாகவிருக்கின்றதோ அதன் பொருட்டு நம்முடைய மற்றவைகள் முழுமையையும் அர்ப்பணஞ் செய்கின்றோம். ஒருவனுக்குப் பணத்தில், அதிகப் பிரேமையிருப்பதாக வைத்துக்கொள்வோம். அது சம்பந்தமாக, ஒரு வேளை புத்திர களத்ராதிகளை இழக்க நேரிட்டாலும் இழக்கத் துணிகின்றான். பணத்திலுள்ள பக்தி அவ்விதம் செய்யத் தூண்டுகின்றது. அதுபோல், பகவானிடத்தில் நம்முடைய முழு பிரேமையையும் அர்ப்பணம் செய்ய வேணும்.

நமக்கோ இந்த உடம்பு அனாதிகாலமாக வந்து கொண்டேயிருக்கின்றது. உடம்பே ஓர் உடம்பு, அதாவது ஓர் வியாதி போன்றது. அந்த உடம்பை அகற்றிக் கொள்ளவேண்டியது தான், நாம் எடுத்திருக்கும் இந்த ஜன்மாவின் கார்யமாகும். உடம்புடன் இருப்பது 'நாம்', 'நாம்' என்கிற வஸ்து, அது தான் ஜீவாத்மா. அதுதான் பரமாத்மாவின் அணு, அது ஹிருதய குகையில் பிரகாசிக்கின்றது.

மனித ஜன்மா கிடைப்பது துர்லபம். அதில், நாம் செய்யும் கர்மாக்களுக்குத் தகுந்தபடி, புண்ணிய பாபங்கள் ஏற்படுகின்றன. இந்தச் சரீரம் எப்படி ஏற்பட்டது' அதை எப்படி அகற்றிக் கொள்வது, என்பவைகளைச் சிந்தனை செய்வதற்கும் ஸபலமாக்கிக் கொள்வதற்கும்' இந்த மனுஷ்ய ஜன்மாவில் தான் வசதி. நாம் இந்த ஜன்மாவில் எவ்வளவோ வஸ்துக்களிடம் பிரேமை வைக்கின்றோம். பிரேமை ஒழுங்கானால் புண்ணியம் லபிக்கின்றது. ஒழுங்கு தப்பானால், பாபம் சம்பவிக்கின்றது. செய்யும் கர்மாக்களை, புண்ணிய பாப பலன்களுக்கு உட்படுத்தாதபடி, ஈஸ்வரப் பிரீதியாய்ச் செய்ய வேண்டும். புண்ணியம், பாபம், ஏற்படக் கூடிய நிலைமைக்கு நாம் சங்கல்பித்து கர்மாக்களை நடத்தினால், அதன் படிக்குச் சரீரங்கள் ஏற்பட்டுக் கொண்டேவிருக்கும். எனவே, நம்முடைய சரீரம் எடுக்கும் சம்பந்தமான வாரண்டு இருந்து கொண்டேவிருக்கும். முடிவில், நிரந்தர சுகம் ஏற்படவில்லை. அவ்வித சுகத்தைப் பெற, நம் பெரியோர்கள் நமக்குச் சுலபமாக வழி காட்டியிருக்கின்றார்கள். அதாவது, சர்வ வியாபகமான கடவுளிடம் பிரேமை காட்டும்படி சொல்லியிருக்கின்றார்கள். நம்முடைய வீடு, சொத்துக்கள் யாவற்றும் கடவுளுடையது என்கிற எண்ணம் ஏற்படவேணும். அந்தப் எண்ணம் ஏற ஏற, நம்முடைய சொத்துக்களில் உள்ள பந்தங்கள் வர வர அறுபடும். ஹிருதய குகையில் கெட்ட எண்ணங்கள் நெருங்கி அழுக்கடையாதபடி எப்பொழுதும் கவனித்துக் கொண்டு, அதில் விளங்கும் ஈஸ்வர ரூபத்தை மனம் சலிக்காதபடிக்குத் தியானம் செய்து வரவேண்டும். அவரவர்களுக்கு சௌகர்யமாகத் தோன்றுகிற மூர்த்தியின் முழு ரூபத்தையோ, அல்லது அந்த மூர்த்தியின் திருவடிகளையோ, தியான யூபமாக வைத்துக் கொள்ளலாம். ஆரம்பத்தில், இது சிறமமாகத் தோன்றலாம். கொஞ்சம், கொஞ்சமாக அப்பியாசம் செய்து வந்தால், பக்தியின் சித்தி பெறுவது நிச்சயம். இதனால், ஸம்ஸார வாழ்க்கையை அறவே ஒழித்துவிடவேண்டுமென்பதில்லை. கிரஹ கிருத்தியங்களையும், கர்மாக்களையும், தவறாமல் செய்து வரவேண்டும். கிரஹ வேலைகளில் சிலவாகும் நேரத்தை நாளடைவில் குறைத்துக் கொண்டேவந்து, பகவத்தியான நேரத்தை அதிகப்படுத்திக் கொண்டே வரவேண்டும் கடவுளிடம் வைக்கும் பக்தி எந்த சமயத்திலும், எந்த அவஸ்தையிலும், மாறாதபடிக்கிருந்து வருவதை அப்பியசிக்கவேண்டும் உதாரணமாக, குடிப்பவனிடம் குடிக்க ஆரம்பிக்கும்முன் எந்த எண்ணம் கடைசியாகத் தோன்றுகிறதோ, அந்த எண்ணந்தான் குடித்த பிறகு அவனிடம் பிரதானமாகக் காணப்படுகின்றது. உறங்கும் முன் எது கடைசி எண்ணமாக விருக்கின்றதோ, அதுதான் சொப்பனத்திலும் ஏற்படுகின்றது. மரணமடையும்முன் எது கடைசி எண்ணமோ, அந்த எண்ணத்தை அனுசரித்து மறு ஜன்மம் ஏற்படுகின்றது. பைத்திய அவஸ்தையிலும், பைத்தியம் ஏற்படும் முன் எது கடைசி எண்ணமாகவிருங்கின்றதோ, அதுதான் விகஸிக்கின்றது.

அப்பய்ய தீக்ஷிதர் என்னும் மகான், தமக்கு உன்மத்த அவஸ்தையிலும் பகவானிடத்தில் பக்தி மாறாமலிருக்குமா என்பதைச் சோதித்துக் கொள்ளும் பொருட்டு, ஊமத்தங்காயை உண்டு, உன்மத்தனாக்கிக் கொண்டாராம் அந்தநிலையில், 'ஆத்மார்ப்பணஸ்துதி' என்ற ஓர் உயர்ந்த கிரந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார். உன்மத்த அவஸ்தையினின்றும் தெளிவுற்ற பிறகு, தம்முடைய ஈஸ்வர பக்தி மாறாததை அறிந்து, சந்தோஷப்பட்டுக் கொண்டாராம். அதுபோல், எந்த நேரத்திலும், எந்த அவஸ்தையிலும் நமக்கு பகவானுடைய ஞாபகம் இருந்துவருவதை அப்பியசித்துக் கொண்டே வந்தால் இந்த ஜன்மத்திலேயே முழு பலன் ஏற்படாவிடாலும், அடுத்தடுத்து ஏற்படும் உத்தம ஜன்மாக்கள் ஏதேனும் ஒன்றில் பலன் ஏற்படுவது நிச்சயம். ஆகவே, எவனொருவன், தன் சகல ஐஸ்வர்யங்களையும் ஈஸ்வரார்ப்பணம் செய்து, ஹிருதய கமல வாசியான ஈஸ்வரனை அனவரதமும் தியானித்துக் கொண்டிருக்கிறானோ, அவன் உடம்பற்றவனாகி, தானே அந்த ஈஸ்வரனாகி விடுகின்றான். அதுதான் மோக்ஷநிலை.

தற்காலத்தில் ஆஸ்பத்திரி, பாடசாலை இவைகள் விருத்தியாகிவருகின்றன. ஆலய நிர்மாணத்திலோ, ஜீர்ணோத்தாரணத்திலோ, வெகுவாக சிரத்தையில்லை. ஆஸ்பத்திரிகள் அதிகமாகி வருவதில், ஜனங்கள் நல்ல மருந்துகளைச் சாப்பிட்டு, பலசாலிகளாக ஆக்கிக்கொ[illegible] விரும்புகின்றார்கள். வித்யாசாலைகள் அதிகமாவதின் மூலம், குயுக்தி வாதம் அதிகரிக்கின்றது ஆலயங்களினால் என்ன நன்மையென்றால், அந்த இடங்களில் காந்தம் தவழுகின்றது, கடவுள் ஞாபகத்தில், மனம் இடுபடுகின்றது. அகங்காரம் முதலான பந்தங்கள் குறைவுபடுகின்றன. ஸ்தூபிதரிசனமே மகா புண்யத்தைச் செய்யக் கூடியது, ஆலயங்களில் சிரத்தை மிகவும் முக்கியம் காட்ட வேண்டியது.

கிருதயுகத்தில் யாவரும் பக்திமான்களாக விருந்தார்கள். ஒருவருக்கொருவர் மனக்கசப்புக் கிடையது. கோர்ட்டுகள் தேவைப்படவில்லை. யாவரும் முக்தி பெற்றார்கள். இப்பொழுதோ பக்தி மார்க்கத்தில் பிரவர்த்தி குறைவு. விவகாரங்கள் அதிகம், கோர்ட்டுகள் விருத்தியாகின்றன.

ஆகையால், பக்தி பண்ணிக்கொண்டு வந்தால், முத்தி பெறுவது நிச்சயம். கடவுளைத் தியானிப்பதற்கு, பக்திமார்க்கம் சுலபமானது.

A. கோபாலய்யர்.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:— பட்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்.

நெல்லை ஜில்லா ஸனாதந மஹாநாடு

ஸர்க்கார் மாளிகைமுன் ஸத்யாக்ரஹ ஆதரவு

தீர்மானங்களின் விவரம்.

ஆழ்வார் திருநகரி உபயவேதாந்த கலாசாலையில் நடைபெற்ற நெ. 2 ஜில்லா சனாதன தர்மமாஹநாட்டின் 2-ம் நாள் கூட்டம் 25–12–39 திங்களன்று மாலை மீண்டும் கூடியது. ஆரம்பத்தில் வக்கீல் ஸ்ரீமான் ஸாது கணபதி பந்துலு தலைமை வகித்தார் அடியிற் காணும் தீர்மானங்களின்பேரில் பிரரேபிப்பவர்கள் ஆமோதிப்பவர்கள் நிலையில் ஸ்ரீ வைகுண்டம் வக்கீல் ஸ்ரீமான் டி. எஸ், தாதாசாரியார் ஆழ்வார் திருநகரி சிரோன்மணி பண்டிட் திருமலை நல்லான் ஸ்ரீ ராமகிருஷ்ணய்யங்கார் தேனிர்க்குளம் மிராசுதார் வக்கீல் ஸ்ரீமான் டி. எம். முத்துசாமி அய்யர் ஸ்ரீமான் நாட் நாராயண ராவ் முதலிய தலைவராலும் சுருக்கமாய் பேசப்பட்டு யாவருக்கும் விபரமாய் யறிவிக்கப்பட்டபின் தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின. தீர்மானங்களின்விபரமாவன

உலகயுத்தத்தால் நமது பிரிட்டிஷ் ராஜங்கத்திற்கு வெற்றி பிரார்த்தனை செய்து ஆதரவளிக்கவேண்டுமென்பது. மாகாண கவர்மெண்டு நிர்வாஹத்தை மே. த. கவர்னர் அட்வைசரிபோர்டார்களுடன் கவனித்து வருவதில் திருப்தி தெரிவித்தல். சென்னை எண்டோமெண்ட் போர்டை எடுத்துவிட வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுதல்.

ஆலயப்பிரவேசச் சட்டத்தை ஒழித்து இது வரை ஹரிஜனங்கள் சென்ற ஆலயங்களுக்கு சம்புரோக்ஷணம்செய்தல் வேண்டுமென சர்க்காரிடம் வற்புறுத்துதல்.

கவர்னர் மாளிகைமுன், விரைவில் சட்டத்தைஒழிக்காவிடில்சத்யாக்ரஹம்துடங்கவேண்டுமென்ற ஓர் தீர்மானம் மதுரை ஸ்ரீ ஆர். ஆனந்தராவ் பிரரேபித்து சத்யாக்ரஹ அவசியத்தை வற்புறுத்தி உருக்கமாய் பேசினர். ஆர்யதர்மம் மானேஜர் ஸ்ரீமான் நாகராஜய்யர் ஆதரித்து ரஸமாக ஓர் பிரசங்கம் செய்தார், சத்யாக்ரஹத்தில் பலரும் ஈடுபடவேண்டுமெனவும், அது செய்யமுடியாதவர்கள் பணஉதவியும் பிரசாரஉதவியும் செய்யவேண்டிய ஆதரவளிக்கலாமெனவும், அதுவும் செய்யமுடியாதவர்களை. எதிர்பிரசாரத்திலிறங்காமல் மௌனமாய் பார்த்திருக்குமாறு கேட்டுக் கொள்வதாயும் பேசி ஆமோதித்தார். கடைசித் தீர்மான விவாத சமயம் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் டி. ஆர் கணபதி ராமய்யர் விஜயமாய் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார் சம்பந்தப்பட்டவர்களை கலந்து கொள்ளாமல் இச்சட்டம் செய்யப்பட்டது. அநீதமென்றும் சட்டத்தை ஒழிக்க வேண்டியது அவசியமாயினும் அதற்கு சத்யாக்ரஹம் அவசியமில்லையெனத் தோன்றுவதாயும் தற்கால சர்க்கார் நடுநிலையில் இருப்பதால் அவர்களிடம் கேட்டுக்கொள்வதன் மூலமே சட்டத்தை ஒழித்துவிடலாமெனக் கூறி "சத்யாக்ரஹம் செய்ய அவசியம் நேரிட்டு நடைபெறுவதாயிருந்தால் சனாதனிகள் யாவரும் வேண்டிய ஆதரவளிக்கவேண்டும்என்பதாய் தலைவரால் தீர்மானம்திருத்தப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. உபசரணைக்கமிட்டிக் காரியதரிசியால் யாவர்க்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு மஹாநாடு இனிது முடிவெய்தியது, முடிவில் ஸ்ரீமத் ஆத்தான் ஸ்வாமிகளால் தலைவர்களுக்கு ஆசீர்வாத அனுக்ரஹம் செய்யப்பட்டு யாவராலும் வழியனுப்பப்பட்டு சனாதன தர்மகீ ஜே! என்ற கோஷத்துடன் பிரயாணமாயினர். வரவேற்பு கமிட்டி சார்பாக மட்டப்பா ஸ்ரீரங்கய்யங்கார் சொகுசு ஸ்ரீ தேவராஜய்யங்கார் ஞானப்பிரான் ஸ்ரீநிவாஸய்யங்கார் சனாதன தர்மசபா உதவி காரியதரிசி முதலியோர்களால் மகாநாட்டுக்கு வந்துள்ளோரனைவர்க்கும் ஜாகை சாப்பாடு உபசரணை சிறப்பாக செய்யப்பட்டன. (க.வி,கி)

ஸனாதன தர்ம ஸ்திரீகள் மகாநாடு

ஆலயப்ரவேச கண்டனம்

(நமது விசேஷ நிருபர்)

ஆழுவார் திருநகரி ஸ்ரீ உபயவேதாந்த கலாசாலை மண்டப ஹாலில் 25—12—39 திங்களன்று ஸநாதன தர்ம ஸ்திரீகள் மகாநாடு மிகவும் சிறப்பாகநடந்தேறியது. காலையில் கோவில் யானை விருதுகளுடன் வர்ணாச்ரம கீதங்களைப்பாடிக்கொண்டு சிறுமிகள் கூட்டமாய் முன் செல்ல மேளதாளங்களுடன் ஸ்திரீகளின் ஊர்வலம் நாலு வீதியும் சுற்றிவந்து மஹாநாட்டு மண்டப ஹாலுக்கு வந்தது. உபசரணைக்கமிட்டித் தலைவி நாங்குநேரி ஸ்ரீமதி பத்மாவதியாலும் மற்றும் பல பெண்மணிகளாலும் வரவேற்கப் பட்டது.

மகாநாடு ஆரம்பம்

தெய்வப்ரார்த்தனை வேத பாராயணங்களுடன் மகாநாடு ஆரம்பமாகியது. வானமாமலை ஸ்ரீமதி பத்மாவதி அம்மாளால் வரவேற்பு பிரசங்கம்செய்யப்பட்டது. "பெரிய ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி உத்ஸவம் நடைபெறுகையில் இம்மகாநாடு கூடியது மிக விசேஷம். பல ஜில்லாக்களிலிருந்தும் பெண்மணிகள் திரளாக விஜயமாயிருந்தது சந்தோஷமான காரியம். நமது தர்மம் கடமைகள் மிகவும் மேலானது. யாவரும் ஒன்று கூடி யோசனை செய்து ஒற்றுமையுடன் நடப்போமாக" எனக்கூறி ஸ்ரீமதி சீதாலெக்ஷ்மி (தேனீர்க்குளம் ஸ்ரீமான் டி. எம். முத்துஸ்வாமி ஐயர் பெண்) மஹாநாட்டைத்திறந்து வைக்கவேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள். பெருங் கரகோஷத்துடன் யாவராலும் ஆமோதிக்கப்பட்டதும் ஸ்ரீமதி சீதாலெக்ஷ்மி அம்மாளால் மகாநாடு திறப்புவிழா வைபவம் நடத்தப்பட்டு ஓர் பிரசங்கம் செய்யப்பட்டது. ஸ்ரீமதி காந்திமதி அம்மாள் (நெல்லை வக்கீல் ஸ்ரீமான் ஆர். லெக்ஷ்மண அய்யர் எம். ஏ. பி. எல் தாயார்) மஹாநாட்டுக்குத் தலைமை வகிக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. பலத்த கரகோஷ மூலம் சகலபெண்மணிகளாலும் ஆமோதிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைவர் பிரசங்கம்

ஸ்ரீ காந்திமதி அம்மாள் தலைமை வகித்து மஹத்தான க்ஷேத்திரத்தில் கூடியுள்ள ஸ்திரீரத்னங்களின் பெரிய மஹாநாட்டுக்குத்தலைமை வஹிக்கும் பெருமையை தமக்களித்ததற்கு ஆனந்தமெய்தி யாவருக்கும் வந்தனம் கூறி மிகவும் இனிமையாகவும் ரமணீயமாகவும் ஸ்தோத்ரங்கள் மூலம்யாவரையும்மகிழச்செய்தனர். ஸ்ரீமதி காந்திமதியின் தலைமைப்ரசங்கமும் செய்யப்பட்டது.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதி கமலாம்பாள் மதுரை ஸ்ரீமதி சேஷம்மாள் (மாஜி டில்லி எம். எல். ஏ. ஸ்ரீமான் K. ராமய்யங்கார் தமயனார் பெண்) இருவரும் ஆலயப்ரவேசச்சட்டம் சாரதா ஆக்ட், விவாக ரத்து மசோதாக்களை கண்டித்து ஸ்திரீகளின் கடமையை விளக்கிச்சினிமாவுக்குச் செல்வது கூடாதென கேட்டுக்கொண்டு பிரசங்கம் செய்தனர்.

மாலை நடவடிக்கை

மறுபடி மாலையில் மஹாநாடு கூடியது. நெல்லை ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் (ஸ்ரீ கே ஆர். வெங்கட்டராமய்யர் தமயனார் பெண்) ரஸமாக ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினார், ஸனாதன தர்ம கான்பரன்ஸில் கண்ட தீர்மானங்கள் இங்கும் நிறைவேற்றப்பட்டன, ஸ்ரீமதி திருலோகம்மாளால் யாவருக்கும் இறுதியில் வந்தனம் கூறப்பட்டது. பல ஜில்லாக்களிலிருந்தும் பெண்மணிகள் திரளாக விஜயம் செய்திருந்தனர், மகாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்திரீகளிடையே மிகவும் உத்ஸாகம் காணப்பட்டது "ஆலயப்ரவேசச்சட்டம் ஒழிக, சனாதன தர்மகீ ஜே. சனாதன வர்ணாச்ரம சபாக்களில் மெம்பராகுக. சத்யாக்ரகத்தொண்டர்களாகுக. தர்மோரக்ஷதி ரக்ஷித:" என்ற வாக்கியமுள்ள அட்டைகள் மஹாநாட்டு மண்டப ஹாலில் தூண்களில் தொங்கவிடப்பட்டிருந்தன. பலவிடங்களிலுமிருந்து வந்துள்ளோரனைவருக்கும் ஆழ்வார்திருநகரி சனாதன வர்ணாச்ரம சபாவின் சார்பாக வரவேற்புக் கமிட்டியார் சிறந்த முறையில் ஜாகை சாப்பாடு சௌகர்யமளித்து மகாநாட்டை சிறப்பாக நடத்தி வைத்தனர்.

ஸ்ரீ ராதாகல்யாண உத்ஸவ முறை.

ஸ்ரீ ராதா கல்யாண மகோற்சவம் செய்யும் பக்தகோடிகள் அனேகர்களுக்கு, ஸ்ரீ ராதாதேவியானவள் யார்? ஸ்ரீராதகிருஷ்ணன் யார்? என்பதே தெரியாமலிருக்கிற குறைவினை நிறைவாக்குவான் பொருட்டு, சீகாழி. பிரம்ஸ்ரீ ரா. சுப்பராமய்யர். அவைகளை யெல்லாம்; சரித்திர பூர்வகமாய் எழுதியும், அத்துடன் ஸ்ரீ ராதாதேவியினதும், ஸ்ரீ ராதாகிருஷ்ணனதும், தியான ஸ்தோத்திர, கவச, மந்திர, ஸகஸ்ர நாமாதிகளையும் எழுதி சேர்த்து அச்சிட்டுத் தயாராயிருக்கின்றது. இந்நூலில் ஒன்றினை வாங்கினால் ஸ்ரீ ராதா கிருஷ்ணர்களது ஸகல விஷயங்களும் நன்கு தெரிந்து கொண்டு, ஸ்ரீ ராதா கிருஷ்ணனது கிருபைக்குப் பாத்திரர்களாகி, ஸகல மங்களங்களையும் அடைந்து. அதன் பின்னர் அவனது திவ்ய பதவியினையும் அடைந்து, நிரதிசயானந்த நித்யஸுகத்தினையடைவார்களென்பது திண்ணம்.

டை நூல் தமிழும் நாகரமும்
சேர்ந்த புஸ்தகம் 1-க்கு விலை. 0—8—0
தமிழ் சரித்திரம் மட்டில் 0—5—0
நாகர எழுத்தில் ஸ்தோத்திரம்
மட்டில் 0—5—0
தபாற் செலவு வேறு.

இந்நூல் கிடைக்குமிடம்:—
ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய நன்மொழிகள்

முதல் பாகம் ரூ. 1—8—0

இரண்டாம் பாகம் அணா 10.

கிடைக்குமிடம்;—ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸு மார்கழி-மீ 20உ

25 வது ஆண்டு ஆரம்பம்

இன்று நமது பத்திரிகையின் 25- வது ஆண்டு ஆரம்பமாவதை ஸந்தோஷத்துடனும், சிறிது கவலையுடனும் குறிப்பிடவேண்டியிருக்கிறது. சென்ற 24 வருஷ கால சரித்திரத்தை கவனித்தால் நமது மாகாணத்தில் அநேக தினசரிகளும், வாரப்பத்திரிகைகளும், மாதாந்திர ஸஞ்சிகைகளுமாக கணக்கில்லாத பத்திரிகைகள் தோன்றி அல்ப காலத்திற்குள்ளேயே மறைந்துபோன விஷயம் தெரியவரும். தனது கொள்கைக்கு ஆதரவு கிடைக்காமல் தோற்றுப் போன பத்திரிகை பல உண்டு. நிர்வாஹ ஸாமர்த்ய குறைவினாலும், ஆடம்பரச் செலவாலும், பணத்தட்டுனாலும் அழிந்துபோனவை அநேகமுண்டு. இந்த நிலைமையில் பார்த்தால் நமது பத்திரிகையானது சென்ற 24 வருஷங்களாக எவ்வளவோ சிரமங்களுக்கிடையில் உயிர் தரித்து தர்மத்திற்குத் தொண்டாற்றிவருவது ஓர் பெரும் வெற்றியென்றே சொல்லவேண்டும். பத்திரிகையின் நிர்வாஹிகள் காட்டி வரும் ஸாமர்த்தியமும், ஊக்கமும் ஜாக்ரதையுமே இதற்கு முதற்காரணமென்று நாம் சொல்லத் தேவையில்லை. இதைக் கொண்டு இப்பத்திரிகையானது, கவலையற்ற உயர்ந்தநிலைமையில் இருப்பதாக எண்ணிவிடக்கூடாது. பத்திரிகையின் நிலைமையைப்பற்றி ஒவ்வொரு வர்ஷத்திலும் நாம் ஆஸ்திகஸமூஹத்திற்கு வேண்டுகோள் விடுத்தவண்ணமாகவே இருக்கிறோம். ஆயினும் இவ்விஷயமாக நமது ஸமூஹத்தின் போதுமான ஆதரவு ஏற்படாததைக் கண்டு ஏமாற்றமடையவேண்டியிருக்கிறது. நமது மாகாணத்தில் ஸநாதன தர்மத்தை ஸம்ரக்ஷிக்ககங்கணம் கட்டியுள்ள பத்திரிகை இது ஒன்றுதான் என்பதை பலரும் ப்ரத்யக்ஷமாக அறிந்திருக்கிறார்கள். கணக்கற்ற, தர்ம ஸ்தாபனங்களும், தர்ம ஸொத்துக்களும், தார்மிகர்களும் நிறைந்த இத்தென்னிந்தியாவில் இத்தகைய பத்திரிகைக்கு எவ்வளவு பூர்ண ஆதரவு கிடைக்கவேண்டியது நியாயமோ, அவ்வளவு கிடைக்க வேண்டாமா?

மேலும் ஸமீபகாலமாக ஆலயப்பிரவேச கிளர்ச்சி நடந்து வருகையில் இத்தகைய பத்திரிகையின் ஆவச்யகதையும், இதனால் ஏற்பட்ட அளவற்றநன்மையும் யாவரும் அறிந்த விஷயமே. இப்பத்திரிகையை தினசரியாக்கி விடவேண்டுமென்ற தீவ்ர எண்ணமும் பல விடங்களிலிருப்பதை நாம் அறிவோம். ஆயினுமென்ன? இத்தகைய அபிமானங்களுக்கு ஏற்றபடி கார்யத்தில் ஒரு சின்னத்தையும் நாம் காணக் கூடவில்லை. பத்திரிகையை தினசரியாக்கி விடவேண்டு மென்றோ, பக்கங்களை அதிகமாக்க வேண்டுமென்றோ பல நண்பர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். ஆனால் பணசௌகர்யத்திற்கு அவர்கள் எவ்வித ஆலோசனையையும் கூறுவதில்லை. பத்திரிகையின் உண்மையான திரவ்ய சக்தி என்ன வென்பதையும் அவர்கள் கேட்டு அறிந்துகொள்ளுவதில்லை. இதுமட்டுமில்லை. பத்திரிகையில் சிறந்த கட்டுரைகள் வெளிப்படவேண்டு மென்பதை பத்திரிகை நிர்வாஹிகள் உணராமலிருக்கவில்லை. வெளியிலிருந்தும் பல அபிமானிகள் நல்ல விஷயங்கள் வெளிவர வேணுமென்று ஆலோசனை கூறுகின்றனர். ஆனால் நல்ல விஷயங்களை காலத்திற்கு ஏற்றவாறு எழுதி உபகரிப்பவர்கள் பலர் முன் வந்தால் ஸந்தோஷகரமாகும். நல்ல விஷயங்களை எழுதி வெளிப்படுத்தவே நிர்வாஹிகள் ஆசைப்படுகிறார்கள். அறிவாளிகள் அந்த விஷயத்திற்காக இப்பத்திரிகையை உபயோகித்துக் கொள்ளுவதை நிர்வாஹிகள் ஸந்தோஷத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வருஷத்தில் யுத்தம் காரணமாக காகிதத்தின் விலை ஒன்றுக்கு மூன்றாக ஏறிவிட்ட காரணத்தால் பக்கங்களை குறைக்க நேர்ந்திருக்கிறது. சந்தாவை குறைக்க வேண்டுமென்ற யோஜனையும் மேற்கண்ட காரணத்தால் இவ்வருஷம் நிறைவேற்றப்படவில்லை. காகித விலை காரணமாக இவ்வருஷம் பத்திரிகையை சிரமத்துடனேயே நடத்தநேரும். ஆதலால் அபிமானிகள் கார்யத்தில் இறங்கி உதவி செய்யவேண்டிய ஸந்தர்ப்பம் இதுவே. சந்தாதார்களைச் சேர்க்க வேண்டும். நன்கொடைகளைச் சேகரிக்க வேணும். மடாதிபதிகளையும், இதர தர்மஸ்தாபனங்களையும் உதவிபுரியுமாறு தூண்டவேண்டும்.

கூடுமானால் சில உத்ஸாஹிகள் கிளம்பி இப்பத்திரிகைக்கு ஓர் மூல தனத்தைச் சேகரிக்கமுற்படவேண்டியதவச்யம். அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் போன்ற ஸ்தாபனங்களையும் இந்த ஒரே பத்திரிகையான ஆர்யதர்மத்திற்கு உதவிபுரிய தூண்டவேண்டும். பெரிய மகாநாடுகளும் கான்பரன்ஸுகளும் வேறு நல்ல கார்யங்களும் நடத்துகிறவர்கள் அதற்காக வஸூலிக்கும் தொகையில் சிறிது இப்பத்திரிகைக்கு பிரசார வேலைக்கென்று கொடுத்துதவ வேண்டியது அவச்யமாகும். இவ்வாறும் வேறு வழிகளிலும் இன்றியமையாத உதவியைச்செய்து இவ்வருஷம் பத்திரிகையை நிர்விக்கனமாக நடத்த உதவிபுரியும்படி அபிமானிகளை நிர்வாஹிகள் வேண்டுகிறார்கள்.

சென்னையில் பெரிய தீ விபத்து

காங்கிரஸ் மாளிகை எரிந்தது
காங்கிரஸ் பொருட் காட்சி சாம்பலாகியது

சென்னை காங்கிரஸ் மாளிகையைச்சுற்றி வைக்கப்பட்டிருந்த அகிலஇந்திய பொருட்காக்ஷி சாலையில் 2உ பகல் 4 மணிக்கு கதர் கடையில் தீ பிடித்து எங்கும்பரவி பொருட்காக்ஷி சாலை முழுவதும் எரிந்து சாம்பலாகியது. சாலையிலிருந்த சகல சாமான்களும் நாசமாயின. காங்கிரஸ் மாளிகையிலும் தீ பிடித்து எரிந்தது. ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதாம். உயிர் சேதமில்லை.

கவர்னர் ஆலோசகரிடம் ஸநாதநிகள் தூது

ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யக்கோரிக்கை

மதுரையில், கனம் போக்

சென்னை கவர்னரின் முக்ய ஆலோசனை கூறும் மெம்பரான கனம் போக் துரையவர்கள் மதுரைக்கு சென்ற வாரம் வந்தார். வர்ணாச்ரம ஸங்கத்தலைவரான ஸ்ரீமான் என். நடேசய்யர் அவர்களும் ஸ்ரீ நரஸிம்ம ஐய்யங்கார் அவர்களும் கனம் போக் அவர்களுக்கு மதுரை ஆலயப்பிரவேச நிகழ்ச்சிகளையும், அது சம்பந்தமாக மந்திரி ஸபை செய்த அகார்யங்களையும் தேதிவாரியாக வரிசைப்படுத்தி காட்டியும் ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்ய வேண்டிய நியாயத்தை எடுத்து விளக்கியும் அதுவிஷயமாக தங்களுக்கு பேட்டியளிக்கும்படி கேட்டும், ஓர் மனுவை அனுப்பினார்கள்.

அந்த மனுவானது 7100 பேர்களை மெம்பர்களாகக் கொண்ட மதுரைடவுன் வர்ணாச்ரமசுவராஜ்ய சங்கத்தின் ஆதரவில் நடந்த 2 ஆயிரம் பேர் கூடியுள்ள கூட்டத்தின் அதிகாரம் பெற்று அனுப்பப்பட்டதென்றும் ஸ்ரீ நடேசய்யர் குறிப்பிட்டிருந்தார். இக்கடிதத்திற்குப்பதிலாக கனம் போக் துரையவர்கள் 29உயன்று ஸ்ரீ நடேசய்யரவர்களுக்கு கீழ்கண்ட பதிலை அனுப்பினார். அதாவது:—

“ஒதுக்கப்பட்ட வகுப்பினர், கோவில்களில் நுழையும் விஷயமான சென்னை ஆலயப்பிரவேசச் சட்டத்தைப் பற்றி பலத்த ஆக்ஷேபம் இருப்பதை நான் அறிந்துகொண்டிருக்கிறேன். ஆதலால் தங்கள் கடிதத்தில் கண்டபடி பெரிய டெபுடேஷன் ஒன்று அவச்யமில்லை. ஆகையால் நாளை மாலை 2மணிக்கு கலெக்டர் பங்களாவில் உங்களுடைய 2 பிரதிநிதிகள் என்னை வந்து பார்க்க நான் இணங்கியிருக்கிறேன்.

இந்தப்பதில் கிடைத்தபிறகு மறுநாள் 2 மணிக்கு ஸ்ரீமான்கள் நடேசய்யரவர்களும் ராவ்பகதூர் ஆர். நரசிம்ம அய்யங்காரவர்களும் கனம் போக் அவர்களை பேட்டிகண்டு நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். ஆலயப்பிரவேசச் சட்டத்தினால் ஏற்பட்ட தீங்குகளை எடுத்துக்காட்டி அதை ரத்துசெய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்கள். மீனாக்ஷி தர்ம ஸேவாஸங்கத்தாரும் கனம் போக் அவர்களை ஸந்தித்து சட்டத்தை ரத்துசெய்யக் கோரினார்கள்.

வோட்டர்களுக்கு துரோகம்.

இந்தியர சட்டஸபையிலுள்ள காங்கிரஸ் மெம்பர்கள், வரவு செலவு விவாதக் கூட்டத்திற்குப் போகக் கூடாதன்று காங்கிரஸ் கார்யக்கமிட்டி உத்தரவு போட்டிருக்கிறது. ஆதலால் பிப்பிரவரிமாதம் ஆரம்பமாகி2, 3மாதங்கள் நடைபெறப்போகும் சட்டஸபைக் கூட்டத்திற்கு காங்கிரஸ் மெம்பர்கள் போகமாட்டார்கள். இது சட்டஸபை மெம்பர்கள் தங்கள் வோட்டர்களுக்குச் செய்து கொடுத்த உறுதிமொழிக்குத் துரோகம் செய்வதாகும். அவர்களுடைய கடமையிலிருந்து மீறிய கார்யமுமாகும்.

ஜனங்களை பாதிக்கக்கூடிய அநேக விஷயங்கள் வரவுசெலவு திட்டக்கூட்டத்தில் விவாதத்திற்கு வரக்கூடும். யுத்தஸந்தர்ப்பமாகையால் எப்போதையும் விட பல சிக்கலான விஷயங்கள் வரக்கூடும். அச்சமயங்களில் பொதுஜனங்களுடையவும், தங்கள் வோட்டர்களுடைய அபிப்பிராயத்தை எடுத்துச்சொல்லவேண்டியது மெம்பர்

களின் கடமையல்லவா? இவ்வருஷம் புதிய வரிகள் ஏதாவது ஏற்படக்கூடும். விலைவாசிகளின் ஏற்ற விஷயமாக விவஸாயிகளின் ஸாதக பாதகங்களை கவனிக்கவேண்டியிருக்கிறது. இத்தகைய முக்ய ஸந்தர்ப்பத்தில் காரியக்கமிட்டி விபரீதமாக ஆக்ஞையிட்டது மிகவும் கண்டிக்கத்தக்கது. காங்கிரஸ் மெம்பர்கள் ராஜிநாமா செய்துவிட்டு வேறு மெம்பர்களை தெரிந்தெடுத்துக் கொள்ளும்படி வோட்டர்களுக்கு ஸந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுப்பதே நாணயமாயிருக்கும். அப்படியிருக்க வோட்டர்களின்ஸ்வதந்திரத்தையும், நன்மையையும் புறக்கணித்து சட்ட சபைக்குப் போகாமலும் ராஜிநாமா செய்யாமலும் சண்டித்தனம் செய்வது யோக்கியமா? சட்ட ஸபை மெம்பர்களை வெளிப்பட்ட ஒரு ஸ்தாபனமானது தன்னிஷ்டப்படி ஆட்டி வைப்பது ஜனநாயகத்திற்கு ஏற்றதா? இதை ராஜீய அறிவாளிகள் பலமாகக் கண்டித்து வருகையிலும் காரியக்கமிட்டி கண்மூடித்தனமாக உத்திர விட்டிருக்கிறது.

சட்ட ஸபை மெம்பர்கள் வோட்டர்களுக்கு ஜவாப்தாரிகளா, காரியக்கமிட்டியிலுள்ள ஒரு சிறு கூட்டத்தாருக்கு ஜவாப்தாரியா? காங்கிரஸின் ஜன நாயகக் கூச்சலின் நேர்மை இதுதானா? காரியக் கமிட்டி வோட்டர்களின்அபிப்பிராயத்தைக்கேட்டு அறிந்ததா? வோட்டர்களின் உரிமையில் காரியக் கமிட்டி அநீதியாக பிரவேசித்து யதேச்சாதிகார தாண்டவமாடுவது தான் ஜன நாயகமா? (ராஜியவாதி)

குடந்தையில் மதுரை ஸ்திரீ ரத்னங்களின் பிரஸங்கம்

ஆனந்தவிகடனிடம் வெறுப்பு

சிதம்பரத்தில் நடந்த மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய மகாநாட்டுக்கு மதுரையிலிருந்து, ப்ரதிநிதிகளாக சென்றிருந்த ஸ்திரீகள் 15உ சனிக்கிழமை மாலை குடந்தைக்கு விஜயம் செய்தார்கள். குடந்தை ஸ்திரீ சங்கத்தலைவி V. ஜெம்பகத்தம்மாள் பவானி அம்மாள் முதலியவர்கள் அவர்களை வரவேற்று இரவு ஸ்ரீசாரங்கபாணி கோவிலில் ஒரு ஸ்திரீகள் கூட்டத்தை கூட்டினார்கள். கூட்டத்திற்கு பல வகுப்பு ஸ்திரீகளும் ஏராளமானவர்கள் வந்திருந்தனர். புருஷர்களும் பலர் கூடி ஒதுங்கி நின்று கவனித்து வந்தனர். மதுரை ஸ்ரீமதி S. A. மீனாக்ஷி அம்மாள் கம்பீரமாக, மிகவும் தெளிவாகவும், சபையோர் மனது கவரும்படி சுமார் 1 மணி நேரம் பேசினார். ஸ்திரீகளே எப்பொழும் தர்மத்தை காப்பாற்றுபவர்களென்றும் இன்றும் அதர்மத்தை எதிர்த்துபோராடி தர்மத்தைக் காப்பாற்ற வேண்டுமென்றும், மதுரையில் காங்கிரஸ் அரசாங்கம் செய்த அட்டூழியத்தை விவரித்து, அவர்கள் பதவியை விட்டு விலகியதற்கு மதுரை அதர்மமே காரணமென்றும், கூறினார். முக்யமாக ஆனந்த விகடன் பத்ரிகை குறிப்பாக ப்ராஹ்மண ஸமூஹத்தை தாக்கி தர்மத்தை அழிப்பதால் அதை பஹிஷ்கரிக்க வேண்டுமென்றும், மதுரையில் நடந்த அக்ரமத்தை நிவர்த்திக்க எல்லா ஆஸ்திகர்களும் பாடுபட வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார். சம்பகத்தம்மாள் கூறியவந்தனோபசாரத்துடன்ஸபை கலைந்தது. (ந. நி.)

எங்கும் கண்டிக்க வேண்டும்

வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டுள்ள இரண்டுதீர்மானங்களை ஆஸ்திக ஸமூஹத்தினர் பலமாக எதிர்க்க வேண்டியதவச்யம்.

ஜனவரி 26உ யன்று சுயேச்சை தினத்தைக் கொண்டாடும் போது சுயேச்சை பிரதிஜ்ஞையில் தீண்டாமை விலக்கையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று காரியக்கமிட்டி உத்திரவிட்டிருக்கிறது. சுயேச்சை தின பிரதிக்ஞையானது முற்றிலும் ராஜீய ஸம்பந்தம் பெற்ற விஷயமாகும் இந்தியாவிற்கு சுயேச்சை பெற உரிமையிருப்பதாயும், எப்படியாவது அதைஅடையவதென்றும் பிரதிக்ஞை செய்வது நியாயமாயிருக்கும். ஆனால் தீண்டாமை விலக்குப் போன்ற முற்றிலும் மத ஸம்பந்தமான விஷயத்தை அதில் கலக்கக் காரணம் என்ன? இது பெரும் விஷமச் செய்கையாயிருக்கிறது. காங்கிரஸ் அபிமானமுள்ள எந்த ஆஸ்திக ஹிந்துவும் காரியக்கமிட்டியின் விபரீத உத்திரவிற்குக் கட்டுபட மாட்டான். தேசத்தில் மத ஸமூஹ விஷயமாக தாங்கள் செய்த தீமைகளால் காங்கிரஸே அழிந்து போகக்கூடிய நிலைமையை ஸிருஷ்டித்த காந்தீயர்கள் இன்னும் தங்களது பிடிவாதத்தை விடாமல் ஆஸ்திக ஸமூஹத்தைச் சண்டைக்கிழுப்பது போல் தீர்மானம் செய்யப்பட்டிருப்தை தேசமெங்குமுள்ள நியாய புத்தி படைத்த ஹிந்து ஸமூஹத்தினர் உடனே தீவ்ரமாகக் கண்டிக்க வேண்டியதவச்யம்.

நாம் கண்டித்து அபிப்பிராயம் வெளியிடாமலிருந்தால் ஹிந்துக்களனைவரும் தீண்டாமை விலக்குப் பிரதிக்ஞை செய்துகொண்டிருப்பதாக காந்தியும் அவரது சிஷ்யர்களும சொல்லிக்கொண்டு திரிவார்கள். பூனா ஒப்பந்தத்திற்கு நாம் கட்டுப்பட்டதாக இப்போதுசாதிக்கவில்லையா? ஆதலால் இதை ஒவ்வொரு ஊரிலும் கண்டிக்கவேண்டியது அவச்யம்.

தவிர—அரசியல் நிர்ணய ஸபை வேண்டுமென்று காந்திஜியின் பிடிவாதத்தின் மேல் காரியக்கமிட்டி தீர்மானித்திருப்பதையும் நம்மவர்கள் எதிர்க்க வேண்டும். ஆதலால் ஒவ்வொரு இடத்திலும் கூட்டம் நடத்தி மேற்கண்ட விஷயங்களை ஆக்ஷேபித்துத் தீர்மானம் செய்து வெளியிடவேண்டும்.

மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹா நாடு

சிதம்பரத்தில் சிறப்பாக நடந்தேறியது

எற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தபடி, டிஸம்பர் 28, 29 தேதிகளில் சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மஹாநாடு சிதம்பரத்தில் விசேஷவைபவத்துடன் நடந்தேறியது. ஜகத்குரு, காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளும் பம்பாய் வல்லப மடாதிபதிகளான ஸ்வாமிகளும் இந்த மஹாநாட்டிற்கு விஜய செய்து பிரஸங்கம் செய்தது முக்கியமாய் குறிப்பிக்கக்கூடிய விசேஷமாகும். ஸ்ரீஸ்வாமிகளின் விஜயத்தினால் மஹாநாட்டில் கூடியிருந்தவர்களுக்கும் அதை நடத்தியவர்களுக்குமிடையில் விசேஷ உத்ஸாஹமும் ஊக்கமும் காணப்பட்டது.

இந்த மஹாநாட்டை உத்தேசித்து சென்னைமுதலிய பலவிடங்களிலிருந்து அநேகபிரபல பிரதிநிதிகள் வந்திருந்தனர் மதுரையிலிருந்து பல ஸ்திரீகளும் வந்திருந்தனர். மஹாமஹோபாத்யாய ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளும் விஜயமாகியிருந்தார். இந்த மகாநாட்டில் மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் திவான்பகதூர் மாசிலாமணி பிள்ளையவர்கள் தலைமை வகித்ததும், மாயவரம் பிரபல மிராசுதார் ராவ்சாஹிப் ரத்னம் பிள்ளையவர்கள் திறப்பாளராக அமைந்ததும் மிகுந்த சந்தோஷத்திற்கு உரிய விஷயங்களாகும். சேலம் பிரபல வக்கீல் ஸ்ரீமான் ஒய் கே. சேஷய்யர் ஸநாதர் மத்வஜபடத்தை ஏற்றி வைத்தார். ஸ்ரீமான் தி. ஈ. சடகோபாசாரியார் ஸத்கார ஸபையின் தலைவராயிருந்து பிரதிநிதிகளை வரவேற்றுச் சிறந்த பிரசங்கம் செய்தார்.

தலைவருடைய தலைசிறந்த உபந்நியாஸம் நமது இயக்கத்திற்கே புத்துயிர் ஊட்டுவதாயிருந்தது. திறப்பாளரும் மிக்க வன்மையாக அதார்மிகச் செய்கைகளைக் கண்டித்தார், முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டு மஹாநாடு நிர்விக்னமாக நிறைவேறியது. (மகாநாடு விஷயமான ரிபோர்ட் இதுவரை நமக்கு கிடைக்கவில்லை கிடைத்ததும் பிரசுரிப்போம் (ப-ர்)

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 24வது வருஷம் பூர்த்தியாகி 25வது வருஷம் இன்று ஆரம்பமானதால் நமது சந்தாதார்கள் புதிய வருஷத்திற்கான சந்தாத் துகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி, எப்போதும்போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறோம். மானேஜர்.

ஸ்ரீமத் பாகவதம்.

அட்வகேட் ஸ்ரீமான் டி. ஆர். கணபதிருமஅய்யரவர்களால்மொழிபெயர்க்கப்பட்டது

கலிகோ பைண்ட் இங்கிலீஷ்	1	4	0
சாதாரண ,, ,,	1	0	0
கலிகோ ,, தமிழ்	1	8	0
7, 8, 9 ஸ்கந்தங்களை சுருக்கி தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டது.	0	8	0

கிடைக்குமிடம்:—
ஸ்ரீஜனார்தந பிர்ண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்

குழந்தைகளுக்கு கட்டி முதலியரோகங்கள் பலவிதசெயற்கை ஆகாரத்தினால்தான்.
சிறு குழந்தைகளுக்கு தாய் பால் தான் இயற்கையான உத்தம உணவு.

पयस्या. PAYASYA [Regd.] பயஸ்யா

தாயின் பாலை மிருதியாக வளர்க்கிறது.

கிடைக்குமிடம்:—ஆத்ரேய ஆயுர்வேத சாலா. தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி.

விலை. $\frac{1}{4}$ பவுண்டு 1—6—0.
$\frac{1}{2}$ பவுண்டு 2—8—0.
(Packing & Postage extra.)

பல வியாதிகள் கவனிக்குமிடம்:— டாக்டர் T. S. சவுரிராஜன் L. D. SC. ஆயிகுளம்ரோட் கும்பகோணம்

மஹம்மதியர்களிடம் நடுக்கம்.

ஹிந்துக்களிடம் அவமதிப்பு.

பக்தவத்ஸலம் கூற்று

குடைந்தை காங்கேயன் பார்க்கில் காங்கிரஸ் கூட்டமொன்று நடைபெற்றது. சில எம். எல். ஏ. புலிகள் வந்து மைனாரிடிகளுக்கு காங்கிரஸ் ஒரு தீங்கும் செய்யவில்லை யென்றும், எப்போதும் முஸ்லீம்களிடம் பயபக்தியுடனேயே நடந்து வந்ததாயும் ஸமாதானம் கூறிப் பிரஸங்கித்தனர். பார்லிமெண்ட் கார்யதர்சியான ஸ்ரீ பக்வவத்ஸலம் அப்போது சொல்லிய விஷயத்தைக் கவனிப்பது அவச்யம்.

மஹம்மதியர்களிடம் காங்கிரஸ் மந்திரிகள் பணிந்து போனதற்கு மூன்று உதாஹரணம் கூறினுர். மஹம்மதியர்களுடைய மத உணர்ச்சியை புண்படுத்தக் கூடாதென்ற எண்ணத்தினுலேயே சட்ட ஸபையில் வந்தேமாதர கீதத்தை மந்திரிகள் நிறுத்தச் செய்தனராம்,

திண்டுக்கல் முனிஸிபாலிடியில் காந்தி சிலையை வைப்பதை மஹம்மதியர்கள் ஆக்ஷேபித்ததின் மேல் அதை நிறுத்தி விட்டார்களாம்.

மற்றொரு விடத்தில் மஹம்மதியர் எதிர்த்த காரணமாக தேசியக் கொடியேற்றம் கைவிடப்பட்டதாம். இன்னுமிது போல் மஹம்மதியருடைய மனம் நோகாமலிருக்க வேண்டி அநேக கார்யம் விடப்பட்டதுடன், அவர்களுடைய மத ஸமூஹ பாத்யங்களை கண்ணும், கருத்துமாக அதே கவலையுடன் மந்திரிகள் கவனித்து வந்ததாக ஸ்ரீ பக்தவத்ஸவம் மிகுந்த அடக்கத்துடன் பேசினுர்.

ஆனல் அடுத்தாற்போல் அவர், தீண்டாதாருக்கு காங்கிரஸ் மந்திரிகள் செய்த வேலையைப் பெருமை யடித்துக் கொள்கையில் அஹம்பாவத்தையும் அலக்ஷ்யத்தையும் வெளியிட்டுப் பேசினுர். ஆஸ்திகஸமூஹம் எவ்வளவு எதிர்த்த போதிலும் கூட அதை லக்ஷயம் செய்யாமல் ஆலயப் பிரவேசச் சட்டமியற்றப்பட்டதாயும், தலைமுறை தலைமுறையாக இல்லாத ஆலயப்பிரவேசமானது, மதுரை, பழனி முதலியவிடங்களில் தடங்கலன்றி நடப்பது காங்கிரஸ் ஆக்ஷியின் நன்மையால் தான் என்று கூறிப் பெருமையடித்துக் கொண்டார்.

தன் பேச்சிலுள்ள முரண்பட்டை அவர் கவனிக்கவில்லை. மஹம்மதியர் மனம் புண்படக் கூடாதென்று பல விஷயங்களை விட்டுக் கொடுத்தார்கள், ஆனல் கோடிக் கணக்கானஹிந்துமதாபிமானிகளின் மனம் புண்படும்படி அக்கிரமம் செய்தது நேர்மையா? இம்மாதிரி விஷயத்தில் மஹம்மதியருக்கு ஒரு நியாயமும், ஹிந்துக்களுக்கு ஒரு நியாயமும் இருக்க முடியுமா? காங்கிரஸ் மந்திரி ஆக்ஷியில் தான் பக்ஷபாதக் கொடுமையைக் கண்டோம். மத நடுநிலைமை முதலியவைகளில் நேர்மையான கொள்கையுடன் இவர்கள் ஆட்சி புரியவில்லை யென்பதற்கு மேற்கண்ட பேச்சே தக்கருஜுவன்றோ? ஆதலால் தான் எல்லா சிறுபான்மையாரும் காங்கிரஸ் ஆட்சி முறைந்ததில் ஸந்தோஷிக்கிருர்கள்.

விவேகிகள் இல்லையா?

"விவேகிகள் நிறைந்த ஸபையை அமைப்பதில் கஷ்டமிருக்கிறது. விவேகிகள் எங்கிருக்கிருர்கள்? அவர்கள் விவேகிகள் தானென்று யார் உறுதி கூறுவது,,

மேற்கண்டபடி ஸ்ரீ மான் காந்தி பத்திரிகைகளில் எழுதியிருக்கிருர். அரசியல் நிர்ணய ஸபைக்குப் பதிலாக விவேகிகள் நிறைந்த ஸபையொன்றைக் கூட்டி முடிவு செய்யக் கூடாதா வென்று ஒரு நிருபர் காந்திஜியைக் கேட்டிருந்தார். அதற்குப் பதிலாகவே தலைப்பில்கண்ட வாக்யத்தை காந்திஜி வெளியிட்டிருக்கிருர். விவேகிகள் எங்கிருக்கிருர்களென்று காந்திஜி கேட்பதிலிருந்து இந்தியாவிலேயே விவேகிகள் கிடையாதென்று அவர் நினைப்பதாக வெளியாகிறது. யாரையாவது விவேகிளென்று நினைப்பதாயிருந்தால், இதை ருஜுப்படுத்தி உறுதிக் கூறக் கூடியவரும் ஒருவருமில்லை யென்று காந்திஜி சாதிக்கிருர். இதிலிருந்து அவருடைய அலக்ஷ்யபுத்தி வெளிப்படுகிறது. தலைவராயும், மஹாத்மாவாகவும் விளங்குமிவர் இந்த தேசத்தில் விவேகிகளே கிடையாதென்று துணிவாகக் கூறுவது எவ்வளவு கொடுமையானது? ஸ்ரீமான் காநதி உயர்ந்த நிலைமையில் வைக்கப்பட்டு கொண்டாடப் படுகிருர். ஆயிரக் கணக்கானவர்கள் இவர் கீழ் இருந்து வருகிருர்கள். அவர்களெல்லாம் அவிவேகத்தினுல் தான் இவரைக் கொண்டாடுகிருர்களா? ஸ்ரீ ஸத்யமூர்த்தி முதலிய சிஷ்யர்கள் காந்தியை காங்கிரஸின் ஸர்வாதிகாரியாக நியமித்து விடவேண்டு மென்கிருர்கள். காந்திஜியும் தாம் ஸர்வாதிகாரியாக இருக்க இசைந்தார். அவிவேகிகள் பலர் சேர்ந்து ஒருவரை விவேகியாக எப்படி நிர்ணயிப்பது? அவர்தான் அதை எப்படி ஏற்பது? எப்படியும் அரசியலை நிர்ணயிக்கும் ஆற்றல் பெற்ற விவேகிகள் இந்தியாவில் இல்லை யென்று இப்பெரியார் கூறுவது மிகக் கண்டிக்கத்தக்கதாகும்.

இக்கூற்று இந்தியாவின் கௌரவத்தையே இழிவு படுத்துவதாகும். இவர் கூட்ட விரும்பும் அரசியல் நிர்ணய ஸபையில் இருக்கும் பிரதிநிதிகள்மட்டும் விவேகிகளா யிருப்பார்களா? அவேகிகள் நிறைந்த அரசியல் நிர்ணய ஸபையைத் தான் இவர் கூட்டச் சொல்லுகிருரா?

Non-violence and politics:

Mr. S. Srinivasa Iyengar stated at Nellore (25—12—'39) that he was writing a book attacking the Gandhian doctrine of non-violence as applied to politics.

Untouchability—Hindu Maha Sabha President's view:

Of course we should on no account molest or disrespect the sentiments of our Sanatani brothers so far as their personal freedom is concerned. But in public schools, conveyances, posts, services and in other aspect of public life, no Hindu should be permitted to deprive other Hindus of their public rights on ground of caste untouchability above:— Our Sanatani brothers may rest assured that barring the fundamental rights which every Hindu is entitled to in public life, the Hindu Maha Sabha will always refrain from having any recourse to law to thrust any religious reform on any sect within the Hindu fold even in the case of untouchability.

புத்தாண்டு

திருக்குடந்தைத் திருப்பதியினின்றும் வியாழன் தோறும் வெளிவருகின்ற "ஆர்யதர்மம்" எனப்பெரிய தமிழ் வாரப்பத்திரிகைக்கு நாலாருண்டுகள் பூர்த்தியாகி 4—1—1940உ குருவாரத்தன்று ஐயையாண்டு ஆரம்பமாகின்றது. அவ்வாண்டின் முடிவில் இச்சீரிய பத்திரிகையின் "வெள்ளிவிழா" வரும். எனவே அஃது மிகவும் சிறப்புடையது என்று எடுத்துரைக்கவும் வேண்டுமா? கூடுமான வரையில் "தொடரும்" என்ற பகுதிகளை வெளியிடாமலிருத்தல் நலம். புத்தக வடிவத்தில் வரக் கூடியவற்றை அவ்வாறே பிரசுரிக்க முயல்வதே மேல். கொஞ்சங் கொஞ்சமாக வெளியிடுவது பயனற்றதாகவே ஆகும் என்பது பல அறிஞர் அபிப்பிரரயம். "சிறுவர்பகுதி" "மாதர்பகுதி" களும் இருப்பது இலாபகரம். பேரறிவாளரைக் கண்டுபிடித்து அவர்களது சீரிய வியாசங்களைப் பெற்று உலகிற்குத் தொண்டு புரிதல் மேன்மையளிக்கும். ஸநாதனதர்மப்ரசாரகர்களிலநேகர் இத்துறையில் இறங்கி நன்ருக உழைத்தல் அத்தியாவசியகம். இச்சென்னை மாகாண ஆரியர்கள் மனம் வைப்பின் "ஆர்யதர்மம்" இன்றிரவே நன்னிலைக்கு வந்துவிடும். ஆதரிப்போர் எங்கே? தருமம் தன்னை ரட்சிப்பாரை ரட்சிக்கும். ஆர்ப்பாடமான கார்யங்கள் நீண்ட பயனைத்தரா. இடைவிடாது செய்யும் நற்ருெண்டு என்றும் நன்மையளித்துக்காக்கும். ஆர்யதர்மம் வாழ்க. அதன் அபிமானிகள் வாழ்க அதன் அபிவிருத்திக்காக அல்லும் பகலும் அன்புடன் ஆதரித்துவரும் நல்லன்பர் வாழ்க அதன் சீரிய வாசகர்கள் சிறப்புற்று வாழ்க அதன் சந்தாதார்கள் சந்ததமும் மகிழ்ந்து வாழ்க. அதன் காரியநிருவாகிகள் கவலையற்றுக் களித்து வாழ்க, அதன் ஆசிரியர் அமலனை ஆராவமுதனின் இன்னருள் பெற்று இன்புற்று வாழ்க. அதன் கட்டுரையாளர்கள் அகமகிழ்ந்து வாழ்க அவர்கட்கு அயக்கிரீவன் அருள் மல்குக. இதில் விளம்பரம் செய்து பேருதவியளிக்கும் பெருந்தகையாளர் இன்னமுதத் திருமகளின் அருள் நோக்குப்பெற்று வாழ்க.

ஆரியதருமம் செழித்தோங்க அல்லல் போம்; மங்களம் மல்கும்; கமலக்கண்ணன் அருள் நிரம்பும். பொங்கும் மங்களம் எங்குந்தங்குக.

ப. ரெ. திருமலை அய்யங்கார்.

HINDU CASTESYSTEM AND THE CONGRESS

Congress secretary's Views.

The General Secretary of the Congress Acharya Kripalani, in a letter to the Jal Pat Tovak Mandal says:—

"The Congress policy has so for been confined to the removal of untouchability in all shapes and forms. *Our belief is that once untouchability is removed from Hinduism the caste system will automatically disappear.*"

Constituent Assembly:

"Is it too uncharitable to say that Mr. Gandhi expects to carry the uneducated voter of his feel by means of a whirl wind campaign in which high sounding words like truth, Ahimsa, Charkha, Dharma, untouchability, re-inforced if need be, by the threat of a fast, would be used as slogans to give him a mandate to do what he liked?"

Dr. Paranjpye at the Liberal Conference.

மோஹன் ஜன்டாரோ நாகரீகம்

ஒரு ஆராய்ச்சி

(அக்னிஹோத்ரம் ராமானுஜதாதாசாரியார் மீமாம்ஸா சிரோமணி எழுதியது)

உலக சரித்திரத்தில் இந்தியா மிகப் பிரஸித்திபெற்ற புராதன தேசம். இத்தேசத்தின் மதம், நாகரிகம் இவை மிகப் பழமையானவை. உண்மை இவ்விதமிருந்தும், இத்தேசத்தின் நாகரீகத்தை ஆராய்ச்சி செய்த சிலர் மேற்படி உண்மையை மறந்து விபரீதமாகவே முடிவு செய்து விட்டார்கள். "ஆரியர்கள் புதிதாக இந்தியாவில் குடியேறியவர்கள். சுமார் 3000 வருஷங்களுக்கு முன் அவர்கள் ஹிந்து மதத்தை ஆரம்பித்தார்கள். அவர்களுடைய நாகரீகம் மிகப் புதிதானது," என்பவை அவர்களின் கூற்றுக்கள். மௌரியர்களின் காலத்துக்கு முன்னால் நாகரீகத்தின் சின்னத்தை அவர்கள் காணவில்லை, அதனால் அவர்க... மேற்கண்ட முடிவுக்கு வந்தார்கள்.

வெகு சமீபத்திலேயே ...ந்து நதி கரையில்மோஹன் ஜன்டாரோ... என்ற ஒரு நகரம் கண்டுபிடிக்...ப்பட்டது. அதனால் மௌரியர்க...கு முன்பும் இந்தியாவில் உயர்ந்த நா...ரீகம் ஒன்று இருந்தது என்று ...யிற்று. மோஹ ஜன்டாரோவில் ...ண்ட நாகரீகத்தை கண்டு ஆச்சரியப்படாத ஆசிரியர்கள் இல்லை. இந்தியாவின் நாகரீகத்தை குறைத்துக் கூறினவர்களுக்கு இது தக்க பதில் அளித்து விட்டது.

இதனால் சரித்திர ஆசிரியர்கள் சிலர் முன்பு செய்த சில முடிவுகள் பாழாகிவிட்டன. இந்தியாவின் நாகரீகத்தை குறை கூறுவோர்களில் பெரும்பாலும் ஹிந்து மதத்தை அழிக்க நினைக்கும் பாதிரிகளே முக்கியமானவர்கள். அவர்கள் சரித்திர உண்மைகளில் காட்டிலும் இந்திய நாகரீக தூஷணையிலேயே முக்கிய நோக்கம் கொண்டவர்கள். மோஹன் ஜண்டாரோவினால் காணப்பட்ட உயர்ந்த நாகரீகம் அவர்களை கலங்கச்செய்து விட்டது. மேஹான் ஜண்டாரோவால் அவர்கள் தூஷித்து வந்த நாகரீகம் உயாந்ததென்று நிரூபிக்க இடமேற்பட்டுவிட்டது. அதனால் அதை ஸஹிக்காத அவர்கள் இந்திய நாகரிகத்தை பிரித்துப் பேசும் தந்திரத்தை அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். ஆரிய நாகரிகமென்றும், திராவிடர் நாகரிகமென்றும் பிரித்தார்கள். மஹான் ஜண்டோரா நாகரீகம் திராவிட நாகரீகமென்றும், ஆரிய நாகரீகத்தைவிட இது பழைமை ஆனது என்றும் பேசத் தலைப்பட்டார்கள். பம்பாயிலிருந்து வந்த பாதிரி ஒருவர் சென்னையில் பேசும் போது "மோஹன் ஜண்டோரா நாகரீகம் திராவிட நாகரீகமென்று நிரூபிக்க பாடுபட்டது யாவருக்கும் தெரிந்தது. ...ஹன் ஜண்டோரா நாகரீகம் ஆரியனுடையதா திராவிடனுடையதா என்பது நிரூபிப்பதற்கு முன் ஒரு முக்கியமான விஷயத்தை குறிப்பிடவேண்டியது அவசியமாகிறது. ஆரிய நாகரீகத்தை அடிப்படையாகக் கொள்ளாத திராவிட நாகரீகம் ஒன்றும் உண்மையில் சரிதையில் கிடையாது.

தென்னிந்தியாவில் இது வரை அகப்... சின்னங்கள் எதுவும், திராவி... ...கத்தை வெளிப்படுத்தவேயில்லை. தொல் காப்பியம், பத்துப்பாட்டு முதலான பிராசீன தமிழ் கிரந்தங்களிலும் ஆரிய நா... ரீக வாஸனையே ததும்பி நிற்கிறது.

உபௌ வர்ணௌ ...: புபோஷ என்பது ருக்வேத மந்...ரம். இது அகஸ்தியரைப் பற்றிச் செ...ல்லுவது. இங்கு ஆரியர் தஸ்யுக்கள் இவ்...விருவகுப்புக்களையும் அகஸ்தியர் வளர்த்த...ர் என்று சொல்லுகிறது. இங்கு குறிப்பி...ப்படும் தஸ்யுக்கள் திராவிடர்கள் தானா... என்பதை நாம் விசாரிக்கவில்லை. ஆ...ல், சரித்திரக்காரர்களின் முடிவை அங்...கீகரித்து தஸ்யுக்கள் திராவிடர்கள் என்...ற வைத்துக்கொண்டு பேசுவோம். இ...தனால் திராவிட நாகரீகம் அதன் பால்ய ...சையிலேயே அகஸ்தியர்போன்ற மஹரிஷி...களால் வளர்கப்பட்டு வந்தது என்...ற நிச்சயமாகுகிறது. இது போன்ற உண்...மைகளை மனதில் கொள்ளும் எந்த ம...னும் ஆரியத் திராவிட நாகரீகங்களை ...த்துப் பேச முன்வரமாட்டான்.

ஒரு தேசத்தின் நாகரீகத்தை வர்ணிக்க, "உடைந்த மண்பாண்டங்களும் மூக்கு உடைந்த பொம்மைகளும் சீர் அழிந்த சித்திரங்களும் புரியாத எழுத்துக்களும்" உதவுவதைக் காட்டிலும் அந்த தேசத்தின் கிரந்தங்கள் மிக்க உதவிபுரிகின்றன. துரதிருஷ்ட வசமாக, இந்திய தேசச் சரித்திரத்தில் மட்டும் இவ்வுண்மை தலைகீழாக மாறிக்கிடக்கிறது. திராவிடர் நாகரீகம் சம்பந்தப்பட்ட வரையில், இன்று வரை வெளியுள்ள தமிழ் கிரந்தங்களில் ஆரிய நாகரீக வாஸனையே காணப்படுகிறது. ருக்வேதத்திலோ மற்ற எந்த ஆரிய கிரந்தங்களிலோ வஸிஷ்டர் முதலான மஹரிஷிகள் அரசர்களுக்கு ஆலோசனை சொல்லுபவர்களாக இருந்தார்கள் என்று தெரிய வருகிறது. அவ்விதமே பிராசீன தமிழ் கிரந்தங்களைப் பார்த்தால் தென்னிந்தியாவில் இருந்த அரசர்களுக்கும் கபிலர் முதலான மஹரிஷிகள் ஆலோசனை சொல்லுபவர்களாக இருந்தது நன்கு வெளியிடுகிறது. அரசன் சரியாக அரசாட்சி புரியாவிட்டால் பசு பால் கொடுக்காது, பிராமணன் வேதமோதான் என்று பண்டை தமிழர் பரிதபிக்கிறார். தொல் காப்பியத்திலும் ஆரிய நாகரீகத்தின் அஸ்திவாரமான ஜாதிமுறை ஸ்பஷ்டமாகக் காணப்படுகிறது. மேலும் பார்பான் என்று புராதன தமிழ கிரநதஙகளில பிராம்மணர்களை குறிப்பிடுகிறார்கள் இதன் கருத்து என்ன? யாஸ்கர் ரிஷி தர்சநாத் என்று கூறுகிறார் இதனால் ரிஷி என்ற பதத்திற்கு பார்ப்பவன் என்று அர்த்தம் கிடைக்கிறது. இந்த கருத்தைக் கொண்டே ரஷிகளுடைய ஸந்ததியில் பிறந்த பிராம்மணர்களை ரிஷி என்ற பதத்தை மொழி பெயர்த்து பார்ப்பான் என்று கூறுகின்றனர். இது போன்ற பல கிரந்தங்களிலுள்ள பல உண்மைகளை கவனித்தால் திராவிட நாகரீகம் ஆரியர்களுடையதே என்று நிச்சயமாக ஏற்படுகிறது.

ஆகவே க்ரந்தங்கள் மூலம் ஏற்படும் ஆர்யத்ராவிட நாகரீக ஐக்கியத்தை வெறும் ஆதாரமில்லா யுக்திகளைக் கொண்டு குலைக்கப்பார்ப்பது நியாய மில்லாதது.

மஹன் ஜண்டோரா நாகரீகத்தைப் பற்றி ஆரம்பத்தில் பலத்த குழப்பம் உண்டாகிவிட்டது. ஆரிய நாகரீகத்திற்கு சுமார் 2000 வருஷங்களை வயதாகவும் கல்ப்பித்துவிட்டனர். ஆரியர்கள் வருவதற்கு முன்னால் இத்தேசத்தில் பூர்வீகக் குடிகள் இருந்து வந்ததாக நிச்சயித்து விட்டார்கள். இதற்கு அனுகூலமாக சுமார் 5000 வருஷங்களுக்கு முன்பிருந்த (மஹன் ஜன்டோரா) நாகரீகத்தைப் பற்றி தீர்மானிக்க வேண்டி வந்தது. இதனால் ஒரு சிலர் அதை திராவிட நாகரீகமாக இருக்கலாமென்று ஊகிக்கலாயினர். இந்த ஊஹத்திற்கு தமிழ் பிராசினகிரந்தம் எதுவும் ஆதாரமாக கிடைக்கவில்லை. மஹன் ஜன்டோராவில் கண்ட நாகரீகத்தை ஜாடையாகக் கூட தமிழ் கிரந்தங்கள் ஆதரிக்கவில்லை. இப்படியிருந்தும் சரித்திரக்காரர்களுடைய கற்பனையே இங்கு முக்யமாக இருக்கிறது. அங்கு காணப்படும் எழுத்துக்கள் இன்னும் நன்றாக படிக்கப்படவில்லை, எந்த பாஷை என்றே விளங்கவில்லை. இந்நிலையில் அந்த நாகரீகத்தை யாருடையது என்று தீர்மானம் செய்ய முடியாது. ஆகவே இதை திராவிட நாகரீகமாகச் சொல்வது, கற்பனையேயாகும். முக்கியமாக இந்த நாகரீகத்தைத் திராவிட நாகரீகமாக கூறும் சரித்திரக்காரர்கள் "ஆரியர்கள் இந்தியாவில் ஒரு சமயம் குடியேறினார்கள், அதற்கு முன் ஆரியர்கள் பூண்டே இங்கு இருந்தது இல்லை." என்ற தங்கள் முடிவையே அஸ்திவாரமாக செய்து கொள்ளுகிறார்கள். டாக்டர் கர்ஸான் எலிபின்ஸ்டன் போன்ற மேதாவிகள் இந்த தீர்மானத்தை பலமாக எதிர்க்கிறார்கள், மேலும் சமீபத்தில் ஹிமய மலையிலிருந்து கிடைத்த எலும்புக் கூண்டுகளைக்கொண்டு முதல் மனிதன் ஆர்யாவர்த்ததிலேயே பிறந்ததாக தத்வ சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். நம்தேசத்து கிரந்தங்களும் இந்தியாவின் உற்பத்தி காலம் முதல் இத் தேசத்தில் ஆரியர்களுடைய சம்பந்தத்தை அதிகமாய்ச் சொல்லுகின்றன. ஆகவே ஆரியர்களுடைய சம்பந்தமில்லாத காலமே இத்தேசத்தில் கிடையாது. இந்த நிலையில் மஹன் ஜன்டோரா நாகரீகம் ஆரியர்கள் வருவதற்கு முன்னால் இருத்த நாகரீகம் என்று கூறுவதற்கு ஆதாரமே கிடையாது. மேலும் சமீபத்தில் மஹன் ஜண்டோரா நாகரீகத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்த பல ஆசிரியர்கள் மேற்படி நாகரீகம் திராவிட நாகரீகம் என்ற முடிவை மாற்றிக் கொண்டு விட்டார்கள். மேற்கிலிருந்து குடியேறிய சுமேரியர் முதலியவர்களுடைய நாகரீகமென்று அவர்கள் கூற ஆரம்பித்து விட்டார்கள்.

ராவ் பகதூர் சண்டி முதலியவர்கள் மேற்படி நாகரீகம் ஆரிய நாகரீகமென்று ஆதியிலிருந்தே நிரூபித்து வருகிறார்கள் ஆனால் பாதிரிகளின் கோலாகலத்தினால் இந்த உண்மை மறைந்து வந்தது. நானும் மிகுந்த சிரத்தையோடு மஹன்ஜண்டோரா ...த்தின் சின்னங்களை நன்கு கவனித்தேன். வீதிகளுடைய அமைப்பு, நகர அமைப்பு, இவைகளையும் பசுபதி, ஸூர்யன் முதலியவர்களின் சித்திரங்களையும், நான் ஆராய்ந்து பார்த்தேன். பல முறை அச்சின்னங்களைப் பார்த்த பிறகு மேற்படி நாகரீகம் சுக்கர நீதி முதலியவைகளில் காணப்படும் நாகரீகமே என்ற முடிவுக்கு வந்தேன். முக்கி...மாக இரண்டு வீதிகளின் பின் பக்கங்களின் இ...யில்உள்ள சுகாதாரச் சந்தும் அங்குள்ள சாக...டைகளும் பூர்ணமாக என்னுடைய கவனத்...த கவர்ந்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பாக்க)

ஸ்ரீ தூகதாஸ் S. V. நடராஜய்யர் பிரசுரங்கள்.

அத்யாத்மயோகம் அல்லது ஆத்மபயிற்சி ராப்பர்	2 8 0
கலிகோ	3 0 0
சுப்ரமண்ய ப்ரஸன்ன மாலா மந்த்ரம்	0 2 0
ஸ்ரீ நாரதபக்தி ஸூத்ரம்	0 12 0

கிடைக்குமிடம்:—

ஸ்ரீஜனார்தன பிர்ண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்

...விகள் ஜாக்கிரதை!

அமிர்தா...சனம்

எல்லா வலிகளுக்கும் துன்...பங்களுக்கும் கைகண்ட இந்திய மருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கி...ர்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீ...க்கும்.

RINGWORM OINTMENT · AMRUTANJAN Ltd. · BOMBAY, MADRAS, CALCUTTA.

மோஹன் ஜன்டாரோ நாகரீகம்.

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

தன "க்ருஹப்ருஷ் டே யதா விதிமலநி...ஹாகம் என்பது நமது நகர அமைப்பு சாஸ்திரம், இதனால் இரண் வீடுகளின் பின்புறங்களுக்கு இடையில் சுகாதாரச் சந்தும் சாக்கடைகளும் இருக்க வேண்டு மென்று ஏற்பட்டது. இதைப் பின்பற்றியே மஹன் ஜண்டோரா அமைப்பும் காணப்படுகிறது. பசுபதி சூரியன் முதலானவர்களும் வேதத்தில் சொல்லப்படாத தேவதைகளல்ல. ஆகவே எப்படியும் அந்த நாகரீகத்தை ஆரிய நாகரீக மில்லை என்று சொல்ல இடமே கிடையாது.

ஜூலை மாதம் 2ந் தேதி மஹன் ஜன்டோரர ஆராச்சி வேலையில் ஈடுபட்டவரும் விக்டோரியா மியூஸியத்தை சேர்ந்தவருமான ஸ்ரீ. சி. ஆர். ராய் என்பவர் மஹன் ஜண்டோரா நாகரீகத்தைப் பற்றி கராச்சி ரோட்டரி கிளப்பில் பேசினர். மஹன் ஜண்டோரா ஆராய்ச்சியில் பூர்ணமாக இடுப்பட்ட இவருடைய வார்த்தைக்கு மதிப்புக் கொடுக்காமலிருக்க முடியாது. அவர் இந்த நாகரீகம் ஆரிய் நாகரீகம் தான் என்பதை ஸ்திரப்படுத்துகிறர் அவர் சொல்லுவதாவது:—

ஆரியர்கள் இரண்டு காலங்களில் "இந்தியாவில் குடியேறினதாக நவீன சரித்திராசிரியர்கள் சொல்லுகிருர்கள், ரஷிகளுடைய அமைப்பை பின் பற்றி அமைந்துள்ள ஆப்கானியர் அநேக பஞ்சாபிகளோ, இவர்கள் போன்ற நீண்ட முகமுள்ளவர்கள் பிற்காலத்தில் குடியேறினவர்கள். அகலமான முகத்தையுடைய ஸிந்தி. குஜராத்தி, மராட்டி, பெங்காலி இந்த வகுப்பினரின் பூர்வீகர்களான ஆரியர்கள், பல்லாயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் குடியேறினவர்கள். அநேகமாக அவர்களே மஹன் ஜண்டோரா நாகரீகத்தை ஆரம்பித்தவர் என்று சொல்லுகிருர். அந்த நாகரீகம் இன்று அடியோடு மறைந்து விடவில்லை என்பது அவர்களுடைய அபிப்பிராயம் ஆரியர்கள் குடியேறியவர் என்றஎண்ணத்தில் இவரும் சரித்திராசிரியர்களுடைய கற்பனைக்குப் பலியாகி விட்டார், ஆனலும் ஆராய்ச்சி வேலையில் நேரில் சம்பந்தப்பட்ட இவர் மேற்படி நாகரீகத்தை ஆரிய நாகரீகமாக இருக்கவேண்டு மென்றே உணர்ந்து பேசுவதை நாம் முக்கியமாகக் கொள்ளுகிறோம். எப்படியும் இது த்ராவிட நாகரீகமல்ல என்ற தீர்மானம் வெளியாகி விட்டதால் பாதிரிகளின் கோலாஹலம் அடங்கி விடுமென்றே நினைக்கிறோம்.

ஸ்ரீ மான் ராய் அவர்கள் முதலில் குடியேறிய ஆரியர்களின் நாகரீகமும் இரண்டாந் தடவை குடியேறிய ஆரியர்களின் நாகரீகமும் கலந்தே இன்று உள்ள ஹிந்து மதத்தை பிறபித்து இருக்கிறது, என்று கூறுகிறர். இதை நாம் பூர்ணமாகஒப்பவில்லை. பின்னர் ஆராய்வோம்.

மேலும் 3000வருஷங்களுக்கு முன்னல் ஆரியர்களுக்கு நாகரீகம் கிடையாது அதனல் ஷெ நாகரீகம் ஆர்யர்களதல்ல என்ற தீர்மானத்தை சில ஆசிரியர்கள் வெளியிட்டு இருக்கிருர்கள். ஆனல் இந்திய தேசச்சரித்திரத்தில் காலத்தை அவர்கள் நன்ருக இன்னும் தீர்மானிக்க வில்லை. இங்நிலையில் இவர்களுடைய பேச்சுக்கு மதிப்பு கொடுப்பதே கூடாது.

இவர்களுடைய நிலையில்லாத ஊகங்களை காட்டிலும் நமது புராணங்களுக்கு மதிப்பு கொடுக்க இடமுண்டு. அவை இன்றைற்கு 5000 வருஷங்களுக்கு முன் குருக்கள் பாண்டவர்கள் இவர்கள் ஆண்டதாகவும் நிச்சயமாக கூறுகின்றன. அன்று இத்தேசம் முழுவதும். ஆரிய நாகரீகமே இருந்து வந்தது, அதே சமயத்திலிருப்த மஹன் ஜண்டோராவும் ஆரிய நாகரீகம் பொருந்தியது என்றே தீர்மானிப்பதில் தோஷமில்லை.

வெளியூர்செய்திகள்.

நாகூர்:— ஸ்ரீ விராசாமி அய்யரால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பஜனைமடத்தில் மார்கழி 9வ யன்று ராதாகல்யாண உத்ஸவம் சிறப்பாய் நடந்தது. ஹரிகதைகளும் ஸங்கீதக் கச்சேரிகளும் நடந்தன.

மஹாதானபுரம்:— மார்கழி-மீ 9வ ஸ்ரீ ராமனந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் 3 வது ஆராதனை விசேஷமாக நடைபெற்றது. லக்ஷார்ச்சனையும், பிராம்மண போஜனம், அன்னதானம், முதலியவை சிறப்பாக நடந்தன. டாக்டர் நடராஜசர்மா, வி. நாராயணஸ்வாமி அய்யர், எ. எஸ். நடராஜன் இவர்களுடைய முயற்சி பாராட்டத்தக்கது.

திருவல்லிக்கேணி:— டிஸம்பர் 22வ யன்று ஸ்ரீ அஹோபில மடத்தில் கீதை தினம் கொண்டாடப்பட்டது. ஆர். கேசவய்யங்கார் தலைமை வகித்தார். ஸ்ரீமான் ஸ்ரீநிவாசவேதாந்தாசாரியர் கீதோபநிஷத் தாத்பர்யம்" என்பது பற்றிப்பேசினர். காலஞ்...ன்ற சேட்லூர் ஸ்ரீ நரசிம்மாசாரியர் ஸ்ரீ யூ. .... கிருஷ்ணமாசாரியர் ஆகியவர்களின் ஏ...கார்த்தக்கூட்டம் 24வ நடைபெற்றது. ...ராவ்சாகிப் ஆர். ராமஸ்வாமிய்யங்கார், எம் எ... ஆனந்த ராவ் முதலியவர் பேசினர்.

ராயப்பேட்டை ஸ்ரீநிவ... ப் பெருமாள் கோவிலில் திருவல்லிக்கேணி தம... சங்கக் காரியதர்சியால் திருப்பாவை உப... ஸம் நடைபெற்று வருகிறது.

ஸ்ரீவாஞ்சியூர்:— ஸ்ரீ விசாலாக்ஷீ சமேத ஸ்ரீவிச்வநாதஸ்வாமி ஆலய திருப்பணியானது ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யாள் நியமனத்தின மேல், கார்த்திகை மீ 29 வ முதல் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகிறது. சிவ பக்த சிரோமணிகள் இந்த கைங்கர்யத்தில் பங்கு எடுத்துகொள்ளும்படி கோரப்படுகிறது.

ஆத்தங்குடி

ஸனதன தர்ம மஹா ஸபை

இன்றிரவு 7 மணிக்கு ராம. கு. ம. சு. வேத பாடசாலையில் மன்னர்குடி வித்வான் ஸ்ரீ ரா. இராமபத்திராசாரியார் அவர்கள் தலைமையில் பௌர்ணமிக்கூட்டம் நடந்தது அவ்வமயம் ஸ்ரீ அர்ச்சாவதாரப் பெருமை மனிதப்பிறவியின் மாண்பு, ஆலயப்பாதுகாப்பு விஷயமாக தற்சமயம் எடுக்கவேண்டிய அவசர நடவடிக்கை, தர்ம ஸேவை. என்பது பற்றி மிக விரிவாகவும் அழகாகவும் அடியிற்கண்ட பெரியார்கள் உபந்யாஸம் புரிந்தார்கள். ஸ்ரீ ஜோதிட வித்வான் மணவாளய்யங்கார் அவர்கள் திரு. சு. வீர. கதிரேசன் செட்டியார் அவர்கள், ஸ்ரீ வித்வான் முத்துசாமி அய்யங்கார் அவர்கள் ஸ்ரீ அரியக்குடி சக்கரவர்த்தி அய்யங்கார் அவர்கள் குமாரர் ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் தலைவரவர்கள் விரிந்த முறையில் வேதாகமபுராண ஆதாரங்களுடன் முன்னுரை முடிவுரை உபந்யசித்தார்கள்.

நமது வைதிக தர்மத்துக்கு அரியஸேவை புரிந்து வரும் ஆர்யதர்மம் பத்திரிகையை கூடிய விரைவில் தினப்பதிப்பாக வெளிவர ஆவனசெய்தல் வேண்டுமென தென்னிந்திய ஸநாதனப் பெரியோர்களை வேண்டிக் கொள்ளுவதாயும் வேறு சில தீர்மானங்களும் செய்யப்பட்டன. (ந, நி)

Printedby S, Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.